**<u>சார்பு நீதிமன்றம், பரமக்குடி</u>**
**<u>O.S No.77/2021</u>**

2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05ம் நாள் பி.வா.சா.1 வது நபரின் வாக்குமூலம் திரு.S.ஸ்ரீநிவாசகன் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லலிதா | தொழில் | |
| க.பெ | பாலகிருஷ்ணன் | கிராமம் | |
| வயது | | வட்டம் | |

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–வாதி தரப்பில்</u>**

வாதி வெங்கடேஷ்வரா சிட்பண்ட் மற்றும் மாஸ் டிராவல்ஸ் நிறுவனத்தில் பங்குதாரரா இருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆவணம் எதையும் நான் பார்த்ததில்லை கேள்விப்பட்டுள்ளேன். அப்போது நான் சிறுவயதாக இருந்தேன். நான் கூறியுள்ளவாறு எந்த நிறுவனமும் இயங்கவில்லை என்றாலும், அதில் எனது சகோதரரான வாதி பங்குதாரராக இருந்ததில்லை என்றாலும், வழக்கிற்காக நான் தவறாக வாதி பங்குதாரராக இருந்தார் என்றும், அந்த தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சீனிவாசா காபித்தூள் நிறுவனத்தை முழுவதுமாக நிர்வாகம் செய்து அதன் இலாபம் மற்றும் நஷ்ட கணக்குகளை எனது சகோதரர் கவனித்து வந்தார் என்றால் சரியல்ல. எனது சகோதரர் பத்தாம் வகுப்பு படித்து முடித்துவிட்டு முழுவதுமாக தொழிலில் ஈடுபட்டு வருமானம் ஈட்டி எனக்கும், எனது சகோதரிக்கும் திருமணம் செய்துவைத்தார் என்றால் சரியல்ல எனது தகப்பனார்தான் திருமணம் செய்துவைத்தார். எனது தாயார் இறப்பிற்கு வாதி வந்திருந்தாரா என்றால் வந்திருந்தார் மூன்றாவது நபர் போல் கலந்துகொண்டார். சடங்குகள் எதையும் செய்யவில்லை. எனது தகப்பனாருக்கும் சடங்குகள் எதையும் செய்யவில்லை. வாதி எனது தாயாரின் இறப்பு நிகழ்விற்கு வந்து இந்து ஆச்சார முறைப்படி இறுதிசடங்குகளை மேற்கொள்ள முயற்சித்த போது நானும், எனது சகோதரியும் பலாத்காரமாக

அவர்களை வெளியேற்றி தடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. எங்களது சமுதாயத்தைச் சார்ந்த சபை நிர்வாகிகள் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்களா என்றால் இல்லை. எனது தகப்பனாருக்கு வாதிதான் இறுதிச்சடங்குகளை செய்தார் என்றாலும், எனது தாயாரின் இறுதிச்சடங்குகளை சபையினர் செய்ய வலியுறுத்தியும் நாங்கள்தான் தடுத்துவிட்டோம் என்றாலும் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் எனது தாயாரின் மனநலம் குறித்து மனநல மருத்துவர் குமரவேல் என்பவர் சான்றிதழ் வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் கூறியதுபோல் சான்றிதழ் எதுவும் இல்லையென்பதால்தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6 இனாம் சாசன ஆவணம் அசல் எங்குள்ளது என்றால் என்னிடம் உள்ளது. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்துள்ள பிரசன்னா எனது மகன் என்றால் சரிதான். 2 வது சாட்சியாக கையெழுத்து செய்துள்ள சௌமியா தேவி 2 வது பிரதிவாதியின் மகள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ஆவணத்தை எழுதுவதற்கு நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு போனேனா என்றால் போனேன். பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் நானும், 2 வது பிரதிவாதியும் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 எங்கு வைத்து யார் தயார் செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மகன் பிரசன்னா, கார்த்திகேயன் மற்றும் 2 வது பிரதிவாதி மகள் சௌமியாதேவி ஆகியோர்கள் எங்குள்ளார்கள் என்றால் மதுரையில் உள்ளார்கள். சார்பதிவாளர் அலுவலகத்தில் போய் சாட்சி கையொப்பம் இட்டது யார் என்றால் நான், எனது சகோதரி, பிரசன்னா, சௌமியா மற்றும் எனது அம்மா. பி.வா.சா.ஆ.6 இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தில் எத்தனை இலக்க சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 1 இலக்கச்சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.6 ஆவணம் ஏற்படும் போது எனது தாயாருக்கு என்ன வயது என்றால் 92 வயது ஆகும். பி.வா.சா.ஆ.6 ஆவணம் எழுதப்பட்டபோது எனது தாயார் சுயநினைவின்றி இருந்தார் என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.6 ஆவணம் வாதியின் உரிமையை மோசம் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் நானும், எனது குடும்பத்தாரும் சேர்ந்து ஏற்படுத்திய ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 ல் ஆவணத்தை ஏற்படுத்திய எனது தாயாரின் புகைப்படம் சார்பதிவாளர் முன்னிலையில் பதிவாளர் அலுவலகத்தில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தாயார் எனக்கு எழுதிக்கொடுத்த பரமக்குடியில் அமைந்துள்ள வீடுகளுக்கு ஆவணம் சிவகங்கை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் எனது தாயார் எனக்கும், எனது சகோதரிக்கும் பாத்தியப்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். வாதி சீனிவாசனுக்கு எனது தாயார் வழி சொத்துக்கள் எதையும் எனது தாயார் பாத்தியப்படுத்தியுள்ளாரா என்றால் இல்லை. வாதி மதுரையில் சொத்து வாங்கியதாகவும், அதை வழக்கில் சேர்க்கவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்தை வாங்குவதற்கு நாங்கள் பணம் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை. நிறுவனத்தை விற்று வாங்கியுள்ளார்கள். எனது குடும்பத்தார் பெயரில் சொத்து வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். 2 வது பிரதிவாதி பெயரில் சொத்து எதுவும் வாங்கவில்லை. நான் வாங்கிய சொத்தை வழக்கில் சேர்க்காமல் வாதி வாங்கிய சொத்தை வழக்கில் சேர்க்கவேண்டும் என தவறாக வாதம் செய்துவருகிறேன் என்றால் எனது சொத்து எனது கணவரின் வருமானத்தில் வாங்கியதாகும். சீனிவாச ராகவனுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்தை வழக்கில் சேர்க்கவேண்டும் என தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. முன்வழக்கு சம்பந்தமாக சபை நிர்வாகிகள் முன்னிலையில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையில் எனது தாயார் மற்றும் தகப்பனாருக்கு சொத்துக்கள் சம்பந்தமாக ஏற்பாடு செய்ய உரிமை இல்லை என்றும், அவர்களது காலத்திற்கு பின்னிட்டு சொத்துக்கள் அனைத்தும் 3 பாகமாக பிரித்துக்கொள்ளவேண்டும் என உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 சொத்து வரி ரசீது பெயர் மாற்ற உத்தரவில் எனது பெயர் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். அதில் கண்ட சொத்துக்களுக்கு வாதிக்கு உரிமை உள்ளதா என்றால் உரிமை உள்ளது. நான் முழுச்சொத்தையும் அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பி.வா.சா.ஆ.2, 3 மற்றும் 4 ஆவணங்களை உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாயார் எவ்வளவு நகை வைத்திருந்தார்கள் என்றால் அவர் வைத்திருந்த நகையை வைத்து எனக்கும் எனது சகோதரிக்கும் திருமணம் செய்துகொடுத்துவிட்டார். அதற்கு பின்னிட்டு அவரிடம் ஒரு செயினைத்தவிர வேறு எதுவும் இல்லை. எனது தகப்பனார் இறக்கும்வரை எனது தாயார் தாலிச்செயின் அணிந்திருந்தார் என்றால் சரிதான். அது 5 பவுன் தாலிச்செயின் ஆகும். என்னுடைய பெற்றோர்களுக்கு 80 வது ஆண்டு பூர்த்தியானதற்கு விசேஷம் நடைபெற்றது என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர்கள் எனது தாயார் மற்றும் தகப்பனார் என்றால் சரிதான். அந்த புகைப்படம் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தகப்பனாருக்கு 80 வயது பூர்த்தியானபோது நடந்த நிகழ்விற்கான புகைப்படம் என்றால் இல்லை 60 வது வயது பூர்த்தியான நிகழ்வு ஆகும். அந்த புகைப்படத்தில் எனது தாயார் அணிந்திருந்த நகைகள் அனைத்தும் அவருக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை பிள்ளைகள் கொடுத்ததாகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் எனது தாயாரின் புகைப்படம் என்றால் சரிதான். எனது மகனின் திருமணத்தின்போது எடுக்கப்பட்டதாகும். அந்த புகைப்படம் வா.சா.ஆ.12 ஆக குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது. எனது தாயார் இறக்கும் தருவாயில் சுமார் 50 பவுன் நகைகள் வைத்திருந்தார் என்றாலும், அதை அவர் இறந்த பின்னர் நானும், 2 வது பிரதிவாதியும் அதை வைத்துக்கொண்டோம் என்றாலும் சரியல்ல. எனது கைவசமுள்ள நகைகள் எல்லாம் அசல் வழக்கில் 2 வது இலக்க சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2 வது இலக்க சொத்திலும் வாதிக்கு 1/3 பாகம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறப்பிற்கு வாதி காரணம் என தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், எனது தகப்பனார் நானும், எனது சகோதரியும் சொத்துக்கள் சம்பந்தமாக பிரச்சனை செய்துவந்ததில் மனஉளைச்சல் ஏற்பட்டு

இறந்தார் என்றாலும் சரியல்ல. வாதி கடனாளியாகவும், ஊதாரியாகவும் இருந்தார் என வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தின் மூலமாக எனக்கு எந்த உரிமையும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்காக ரூ.15,00,000/– கடன் வாங்கியதை வாதி அவரது பாகக்கடனை அடைக்கவேண்டும் என தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், அவ்வாறு எந்த கடனும் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் வாதிக்கு 1/3 பாகம் பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஒத்திக்கு யாரும் இல்லை என்றாலும், வாடகைதாரர் மட்டும் இருந்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை:–** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி/படித்துப்பார்த்து அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.08.04 16:56:28 +0530

சார்பு நீதிபதி
பரமக்குடி.